அதிலே ஏதாவது பிரச்சினை இருக்குமானால், நம்முடைய உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி மோசமாக இருக்கிறது என்பதைத் தெளிவாக எழுத்து மூலம் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அந்தச் சாலையைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளும் நடந்து வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-25

திரு. ஆர். தங்கராஜ் : தலைவர் அவர்களே, எந்தப் பகுதி சரியில்லை என்பதை எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். உண்மையிலேயே அந்த 20.60 கிலோமீட்டரும் சரியில்லை. எனவே அந்தச் சாலையை மாவட்டச் சாலையாக மாற்றுவதுடன் அதிலே 5/8, 19/6 மற்றும் 19/8 ஆகிய இடங்களில் உள்ள தரைப்பாலங்கள் அடிக்கடி கெட்டுவிடுகின்றன. அந்தத் தரைப்பாலங்கள் ஒவ்வொரு ஆண்டும் செப்பனிடப்பட்டாலும், மீண்டும் கெட்டுவிடுகின்றன. எனவே, அந்தத் தரைப்பாலங்களை பைப் உள்ள பாலங்களாக அமைத்துத் தருவார்களா என்பதையும் கேட்க விரும்புகிறேன். அடுத்து அதை மாவட்ட சாலையாக ஆக்க வேண்டும். அந்தப் பகுதி மக்கள் எல்லாம் மாவட்டத் தலைநகரத்திற்கு அந்த வழியாகச் செல்லவேண்டியிருப்பதால், அதை மாவட்டச் சாலையாக எடுத்து, அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, இந்த நிதியாண்டிலாவது நிதியை ஒதுக்கி, பணிகளைச் செய்து முடிப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டச் சாலை என்று ஒன்றும் கிடையாது. ஓ.டி.ஆர்., எம்.டி.ஆர். என்றுதான் இருக்கிறதே தவிர - அதாவது Other District Road and Major District Road, என்றுதான் இருக்கிறது. எந்தச் சாலையாக இருந்தாலும் நெடுஞ்சாலைத் துறை மூலமாகத்தான் அதைப் பராமரிக்கிறோம். அது ஓ.டி.ஆராக இருந்தாலும் சரி, எம்.டி.ஆராக இருந்தாலும் சரி, மற்ற பஸ்ரூட் ஸ்கீமாக இருந்தாலும் சரி, அவற்றையெல்லாம் நாம் பராமரித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே சாலையை மாற்றவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் சாலையை மேம்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக்கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. மா. சுந்தரதாஸ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக, குழுவின் 119, 120 மற்றும் 121-வது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1993-94— அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை நிதி நிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993-94 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன் வைக்கிறேன். @ இம்மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இத்துணை மதிப்பீடுகளில் வருவாய்க் கணக்கைச் சேர்ந்த ரூ. 771.97 கோடியும், மூலதனம் மற்றும் கடன் கணக்குகளைச் சேர்ந்த ரூ. 395.63 கோடியும் அடங்கும்.

2. இம்மானியக் கோரிக்கைகளில் இடம் பெற்றுள்ள முக்கியமான திட்டங்கள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

3. இதுவரை அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்பட்டு, 1987–88 ஆம் ஆண்டிலிருந்து அரசுக் கணக்குக்கு மாற்றப்பட்ட, மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களின் வருங்கால வைப்புநிதிக்கு வட்டித் தொகைகளின் நிலுவைகளைச் செலுத்துவதற்கு கடன் -செலவுகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 53.57 கோடி தேவைப்படுகின்றது.

4. மாவட்டக் காவல் படையின் பயனுக்காக, 200 ஜீப்புகள் வாங்குவதற்கு மானியக் கோரிக்கை எண் 15 - காவல் என்பதன் கீழ் ரூ. 4 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. தொழிற்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயிலுகின்ற காவல் துறைப் பணியாளரின் குழந்தைகளுக்கான "டாக்டர் ஜெ. ஜெயலலிதா சிறப்புப் படிப்புதவி நிதி" க்குப் (மேசையைத் தட்டும் ஒலி) பங்குத் தொகை செலுத்துவதற்காக, இம்மானியக் கோரிக்கையில் ரூ. 6 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது. ஆயுதங்களும் படைக்கலன்களும் வாங்குவதற்காக, கூடுதலாக ரூ. 8.50 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

5. பேருந்துக் கட்டணங்களில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் சலுகை வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட செலவை ஈடு செய்ய, மானியக் கோரிக்கை எண் 17- கல்வி என்பதன் கீழ் ரூ. 11.64 கோடி கூடுதல் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிகளிலும் மேநிலைப் பள்ளிகளிலும் அறிவியல் கல்வியை மேம்படுத்தும் திட்டத்திற்காக, ரூ. 3.53 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

@ 189-191 ஆம் பக்கங்களில் வைக்கப்பட்டுள்ளன.